**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.107 /2018**

**Deposition of P.W.** 8

Name : திருமதி. நாககுமாரி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:16.07.2025

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளம் அனைத்து மகளீர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நான் தக்கலை காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்த போது 23.04.2010ம் தேதி 15.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது சின்னையன் மகள் டாலி என்பவர் தக்கலைஅரசு மருத்துவமனையில் சிகிச்சையில்இருப்பதாக கிடைத்த தகவலின் படி தக்கலை அரசு மருத்துவமனை சென்று இன்டிமேஷன் பெற்று மேல்சிகிக்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற டாலி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து 19.00 மணிக்கு நிலையம் வந்து வாக்குமூலத்தின் தன்மைப்படி தக்கலை காவல்நிலைய குற்ற

எண்.283/2010 பிரிவுகள் 294(பி), 324, 506(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 பெண் வன்கொடுமை தடுப்பு சட்டபடியும் பிரிவு 307 இ.த.ச படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை இவ்வழக்கில் ஆஜர் படுத்தவில்லை. எதிரி மீது குண்டாஸ் வழக்கு பதிவு செய்ய வேண்டுமென்பதற்காக அவர் மீது பொய் வழக்குகள் போட்டு வந்தோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.